Department of Health

# மனத்திறன் சட்டம் 2005 உரிமைப் பாதுகாப்புகள் பறிக்கப்படுதல் என்றால் என்ன?

## மனத்திறன் சட்டம் 2005 உரிமைப் பாதுகாப்புகள் பறிக்கப்படுதல் (Mental Capacity Act 2005 Deprivation of Safeguards) என்றால் என்ன?

**நலப்பராமரிப்பு அல்லது சிகிச்சை குறித்த முடிவுகளை மேற்கொள்ள முடியாத நபர்களுக்காக நலப்பராமரிப்பு அளிக்கும் நலவாழ்வு இல்லம் அல்லது மருத்துவமனையில் நீங்கள் பணிபுரிகிறீர்களா?**

**அனைத்து மருத்துவமனைகள் மற்றும் நலவாழ்வு இல்லங்களுக்குப் பொருந்தும் புதிய அமைப்பு 1 ஏப்ரல் 2009 அன்று தொடங்குகிறது.**

மருத்துவமனைகள் மற்றும் நலவாழ்வு இல்லங்களில் இருக்கும் சில நபர்களால் அவர்களது நலப்பராமரிப்பு மற்றும்/அல்லது சிகிச்சை குறித்து சுயமாக முடிவு எடுக்க இயலாது. ஏனெனில் அவ்வாறு செய்யக்கூடிய மனத்திறன் அவர்களுக்கு குறைவாக இருக்கும். அவர்கள் துன்புறுத்தப்படாததை உறுதி செய்ய மற்றவர்களைவிட கூடுதல் நலப்பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அவர்களுக்குத் தேவை. கூடுதல் பாதுகாப்பு தேவைப்படும் நபர்களை பராமரித்தல் அல்லது சிகிச்சை அளித்தல் என்பது அவர்களது உரிமையை பறித்தல் என்ற அளவிற்கு அவர்களது சுதந்திரத்தை கட்டுப்படுத்துதல் என்ற வகையில் இருக்கும்.

மருத்துவமனைகள் மற்றும் நலவாழ்வு இல்லங்களில் சுதந்திரங்கள் பறிக்கப்படும் நிலையிலுள்ளவர்கள் மற்றும் முடிவுகள் எடுக்க இயலாத நபர்களின் உரிமைகள் பலப்படுத்தப்பட வேண்டும் என மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் கூறியுள்ளது. குறைவான கட்டுப்பாட்டு வழிமுறைகளில் அவர்களை பராமரிக்க இயலுமெனில்இ அவர்களது சுதந்திரம் பறிக்கப்படக்கூடாது.

நலப்பராமரிப்பு அல்லது சிகிச்சை குறித்து சுயமாக முடிவுகளை மேற்கொள்ள இயலாத நபர்கள் மற்றும் கட்டுப்பாடான முறையில் பராமரிக்கப்பட வேண்டிய தேவையுள்ள நபர்களை MCA DOLS பாதுகாக்கும். எடுத்துக்காட்டாக, மனச்சிதைவு, மனநலப்பிரச்சினை அல்லது கற்றலில் தீவிர குறைபாடு உள்ள சில நபர்கள்.

அத்தகைய நபர்களது நலனுக்காக நலப்பராமரிப்பு மற்றும்/அல்லது சிகிச்சை அளிக்கவும் மற்றும் துன்புறுத்தலில் இருந்து பாதுகாக்கவும் அவர்களது சுதந்திரத்தன்மை பறிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படும் எனில் MCA DOLS பயன்படுத்தப்பட வேண்டும் என சட்டம் கூறுகிறது.

## மருத்துவமனைகள் மற்றும் நலவாழ்வு இல்லங்கள் கட்டாயமாகச் செய்ய வேண்டியது பற்றி சட்டம் என்ன கூறுகிறது?

மருத்துவமனை அல்லது நலவாழ்வு மையத்தில் மனத்திறன் குறைவுள்ள ஒவ்வொரு நபர் குறித்தும் கீழுள்ள கேள்விகள் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும் :

- அளிக்கப்படும் நலப்பராமரிப்பு மற்றும்/அல்லது சிகிச்சையானது, ஒரு நபர் தான் செய்யவிரும்பும் செயலை செய்யக்கூடிய சுதந்திரத்தை, அவர்களது உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்ற அளவிற்கு பறிக்குமா?
- அந்த நபரது சிறப்பான நலனுக்காகவே இந்த நலப்பராமரிப்பு மற்றும்/அல்லது சிகிச்சை வழங்கப்படுகிறது என நீங்கள் நம்புகிறீர்களா?

இந்தக் கேள்விகளுக்கான பதில் "ஆம்" எனில், அந்த நபரது சுதந்திரத்தை பறிக்காத வழியில் நலப்பராமரிப்பு மற்றும்/அல்லது சிகிச்சை அளிக்க இயலுமா என்று உங்களை நீங்களே கேட்டு ஆராய வேண்டும். இந்தக் கேள்விக்கான பதில் "இல்லை" என்பதாக இருந்தால் மற்றும் அந்த நபருக்கு வேறு வகையில் நலப்பராமரிப்பு அல்லது சிகிச்சை அளிக்க இயலாது எனில், அந்த நபரது சுதந்திரத்தை பறிப்பது சரிதானா என்று முடிவெடுக்க ஒரு மதிப்பீட்டை செய்யும்படி ப்ரைமரி கேர் ட்ரஸ்ட்டையோ (Primary Care Trust –PCT) (மருத்துவமனைகளுக்கு) அல்லது உள்ளூ ராட்சியையோ (நல்வாழ்வு இல்லங்களுக்கு) கட்டாயம் கேட்க வேண்டும்.

அனைத்து மதிப்பீடுகளுமே அங்கீகாரமளிப்பதில் முடியும் என்று கூற இயலாது. இருந்த போதிலும், மருத்துவமனை அல்லது நலவாழ்வு இல்லத்தில் இருக்கும் நபர் MCA DOLS அங்கீகாரம் பெற்றவுடன் அவருக்கு ஆதரவளிக்கவும் அவர்களது நலன்களைக் கவனித்துக் கொள்ளவும் பிரதிநிதி ஒருவர் அமர்த்தப்படுவார்.

மருத்துவமனை மற்றும் நலவாழ்வு இல்லம். (அவர்களது PCT அல்லது உள்ளூராட்சியுடன் இணைந்து) கீழ்க்கண்டவற்றை மேற்கொள்ள வேண்டும்.

- அங்கீகாரம் மேற்கொண்டும் தேவைப்படுகிறதா என்பதைக் கண்டறிய வழமையாக சோதனைகள் மேற்கொள்ள வேண்டும்.
- மேற்கொண்டும் அங்கீகாரம் தேவையில்லை எனில் அதை நீக்க வேண்டும்.
- MCA DOLS அங்கீகாரம் பெற்றுள்ள நபர் மற்றும் அவரது பிரதிநிதியிடம் அவர்களது அங்கீகாரம் மற்றும் அவர்களது உரிமைகள் மற்றும் பாத்தியங்கள் குறித்து தகவல்களை அளிக்க வேண்டும்.

# MCA DOLS நடைமுறையின் மேலோட்டப்பார்வை



அந்த நபர் அவரது சுதந்திரத்தை இழந்திருந்தால், அல்லது சுதந்திரத்தை பறிப்பது என்ற முடிவை அவர்களது பிரதிநிதி ஒப்புக் கொள்ளாவிடில், அந்த முடிவை எதிர்த்து நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும் உரிமையை இந்தப் புதிய அமைப்பு அளிக்கிறது.

## இந்த அமைப்பு எப்போது தேவைப்படும்?

MCA DOLS ஆனது, நலப்பராமரிப்பு தரநிலைகள் சட்டம் 2000 பகுதி - 2ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள என்எச்எஸ் (NHS) மருத்துவமனைகளில் அல்லது தனியார் மருத்துவமனைகளில் அல்லது நலவாழ்வு இல்லங்களில் உள்ள 18 மற்றும் அதற்கும் அதிகமான வயதுள்ள நபர்களுக்காகும்.

ஆஊயு னுழுடுளு அங்கீகாரம் பெறக்கூடியவர்கள், மருத்துவமனைகளில் இருப்பதைவிட கூடுதலான நபர்கள் நலவாழ்வு இல்லங்களில் இருப்பார்கள் என அரசு எதிர்பார்க்கிறது.

மிகக் குறைவான நபர்களுக்கு MCA DOLS அங்கீகாரம் தேவைப்படும் என அரசு கருதுகிறது.

அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்க யோசிக்கும் முன் மருத்துவமனைகளும் நலவாழ்வு இல்லங்களும் மற்றவர்களது சுதந்திரத்தைப் பறிப்பதை தவிர்க்கக் கூடிய மாற்று வழிகளில் சிகிச்சை அளிப்பது குறித்து சிந்திக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறது.

## பதிவேடுகள் பராமரித்தல்

MCA DOLS நடைமுறையின் ஒரு பகுதியாக விளக்கமான பதிவேடுகளை மருத்துவமனைகளும் நலவாழ்வு இல்லங்களும் பராமரிக்க வேண்டும். இந்தப் பதிவேடுகள் பராமரிக்கும் பணிக்கு உதவும் விதத்திலும் மற்றும் MCA DOLS அமைப்பின் நிர்வாகம் மிகவும் எளிதானது என்பதை உறுதிப்படுத்தவும், மருத்துவமனைகளுக்கும் மற்றும் நலவாழ்வு இல்லங்களுக்கும், பிசிடிகளுக்கும் (PCT) மற்றும் உள்ளூராட்சிகளுக்கும் பலவகையான படிவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தப் படிவங்களை பயன்படுத்துவது, மருத்துவமணைகள் மற்றும் நலவாழ்வு மையங்கள் சட்டம் அவர்கள் செய்யவேண்டியது என்ன என்று கூறுகிறதோ அதைச் செய்வதை உறுதிபடுத்தவும் அவர்களது பதிவேடுகள் தேவைப்படும் தர நிர்ணயத்திற்கேற்ப பராமரிக்கவும் உதவும்.

## MCA DOLS குறித்து மேலதிக தகவல

மேலதிக தகவல்கள் உங்களுக்கு தேவை எனில், உங்கள் உள்ளூர் மண்டல MCA DOLS பொறுப்பாளரை தொடர்புகொள்ளவும்:

| மண்டலம | மின்னஞ்சல் தொடர்பு விவரங்கள | அலைபேசி |
|---|---|---|
| யார்க்சையர் மற்றும் ஹம்பர் | Bruce.Bradshaw@nimheneyh.nhs.uk | 07940 361 335 |
| வடகிழக்கு | Pat.Stewart@csip.org.uk | 07799 343 356 |
| வடமேற்கு | christine.hutchinson@csip.org.uk | 07795 963 519 |
| கிழக்கு மிட்லாண்ட்ஸ் | Robert.Nisbet@eastmidlands.csip.nhs.uk | 07824 707 985 |
| கிழக்குப்பகுதி | Joseph.Yow@csip.org.uk | 07917 184 109 |
| தென்கிழக்கு | Keith.Nieland@csip.org.uk | 07711 980 057 |
| லண்டன | Maggie.Goff@londondevelopmentcentre.org | 07932 612 977 |
| | Steve.Chamberlain@londondevelopmentcentre.org | 07967 347 764 |
| தென்மேற்கு | David.Pennington@csip.org.uk | 07799 627 244 |
| மேற்கு மிட்லாண்ட்ஸ் | Ralph.Hall@csip.org.uk | 07825 402 599 |

அல்லது கீழ்காணும் எங்கள் இணைய தளத்திற்கு வருகை தாருங்கள்:

http://www.dh.gov.uk/en/SocialCare/Deliveringadultsocialcare/MentalCapacity/MentalCapacityActDeprivationofLibertySafeguards/index.htm

வேண்டுகோளின் பேரில் இந்த கையேடு பிறமொழிகளிலும் மாற்று வடிவங்களிலும் கிடைக்கும்.

## தொடர்பு மற்றும் தகவல் விவரங்கள்

அஞ்சல்: MCA DOLS Implementation Programme
Unit 124, Department of Health
Wellington House
133 – 155 Waterloo Road
London SE1 8UG

மின்னஞ்சல் : dols@dh.gsi.gov.uk

புதிய MCA DOLS பற்றிய தகவல் கீழ்காணும் அமைப்புகளால் உங்களுக்கு வழங்கப்படுகிறது:

Department of Health
Office of the Public Guardian

Department of Health

© Crown Copyright 2008
291340 1p 40k Dec08 (NEW)
Gateway No.10989
சுகாதாரத்துறைக்காக சிஓஐ ஆல் (COI) தயாரிக்கப்பட்டது
www.dh.gov.uk/publications

recycle
When you have finished with this publication please recycle it

50% recycled
This publication is printed on 50% recycled paper